பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 06 2025 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. இந்தியா - இங்கிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருப்பதன் மூலம் இரு நாடுகளுடனான நல்லுறவு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் உள்ள பெரிய துறைமுகங்களில் கார்பன் உமிழ்வை முற்றிலும் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

3. பேரிடர் மீட்புக்கான உள்கட்டமைப்பு வசதிகள் நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் என்று பிரதமரின் முதன்மை செயலாளர் திரு. பி.கே. மிஸ்ரா கூறியுள்ளார்.

4. உலக பெருங்கடல் பாதுகாப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. 21 வயதுக்கு உட்பட்டோருக்கான 4 நாடுகள் பங்கேற்கும் மகளிர் ஹாக்கிப் போட்டி பெல்ஜியத்தில் இன்று தொடங்குகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டிருப்பதன் மூலம் இரு நாடுகளுடனான நல்லுறவு மேலும் வலுவடையும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், புதுதில்லி வந்துள்ள அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. டேவிட் லாமி உடனான சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் திரு. டேவிட் லாமியின் பங்களிப்பிற்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு எதிராக இந்தியா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு இங்கிலாந்து ஆதரவு தெரிவித்துள்ளதுதற்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மாநில பிஜேபி நிர்வாகிககள் கூட்டம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக மதுரை வந்துள்ளார்.

இன்று காலை பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் திரு. அமித் ஷா வழிபாடு செய்கிறார்.

பின்னர் மாநில பிஜேபி நிர்வாகிகளுடனான கூட்டத்தில் பங்கேற்கும் அவர், தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் கட்சியின் தயார் நிலை குறித்தும் ஆலோசனை நடத்துகிறார்.

இன்று மாலை ஐந்தரை மணிக்கு நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் அவர் உரையாற்றுகிறார்.

உள்துறை அமைச்சரின் வருகையை ஒட்டி மதுரையில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக மதுரை விமான நிலையம் வந்த திரு. அமித் ஷாவை மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் உள்ளிட்ட முக்கிய பிஜேபி நிர்வாகிகள் வரவேற்றனர்.

<<<<>>>>

நாட்டில் உள்ள பெரிய துறைமுகங்களில் கார்பன் உமிழ்வை முற்றிலும் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

டென்மார்க்கில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், 2047ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய கார்பன் வெளியேற்றம் என்ற நிலையை எட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

கடல்சார் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் சாகர்மாலா உள்ளிட்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

பசுமை எரிசக்தியுடன் கூடிய நவீன சரக்குப் போக்குவரத்துகள், டிஜிட்டல் தொழில்நுட்பம், பசுமை துறைமுக மேம்பாடு உள்ளிட்ட திட்டங்களுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக அவர் கூறினார்.

தூய்மையான நீர்வழி சரக்குப் போக்குவரத்திற்கான வழித்தடங்கள் மற்றும் பசுமை எரிசக்தி பயன்பாடு ஆகியவற்றில் உலகின் மையமாக இந்தியாவை உருவெடுக்கச் செய்வதற்கான இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக திரு. சர்பாநந்த சோனோவால் தெரிவித்தார்.

<<<<>>>>

உடல் பருமன் மற்றும் அதுசார்ந்த பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெபி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், உணவுக் கட்டுப்பாட்டு முறைகளை முறையாக பின்பற்றாவிட்டால் வரும் 2050ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் உடல் பருமனால் பாதிக்கப்படக்கூடிய சூழல் உள்ளதாக கூறினார்.

உணவில் எண்ணெய்ப் பயன்பாட்டை 10 சதவீதம் வரை குறைக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியதை அவர் சுட்டிக்காட்டினார்.

வலுவான நாட்டைக் கட்டமைக்க ஆரோக்கியமான சமூகம் அவசியம் என்றும் திரு. ஜெபி. நட்டா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

உலக பெருங்கடல் பாதுகாப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

கடல்சார் வளங்களை பாதுகாக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

கடல்வாழ் உயிரினங்கள், பவழப் பாறைகள் உள்ளிட்ட கடல்சார் ஆதாரங்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பல்வேறு நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கடல்சார் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

<<<<>>>>

பேரிடர் மீட்புக்கான உள்கட்டமைப்பு வசதிகள் நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும் என்று பிரதமரின் முதன்மை செயலாளர் திரு. பி.கே. மிஸ்ரா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பேரிடர் மீட்பு கூட்டமைப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், பருவநிலை மாற்றம் மற்றும் பேரிடர் அபாயங்களை முன்கூட்டியே கண்டறிவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இந்தக் கூட்டமைப்பில் இதுவரை 56 நாடுகள் உறுப்பினராக இணைந்துள்ளது பாராட்டுதலுக்குரியது என்று அவர் கூறினார்.

வளர்ச்சியடைந்த நாடுகளின் பேரிடர் அபாயங்கள் குறித்த சிறந்த நடைமுறைகள், நிபுணத்துவம், நிதியுதவி, தொழில்நுட்ப உதவிகள் ஆகியவை வளரும் நாடுகளுக்கு உதவிடும் என்று திரு. மிஸ்ரா தெரிவித்தார்.

<<<<>>>>

மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் விடுத்துள்ள அறிக்கையில், இதுபோன்ற குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் மற்றும் தேர்தல் விதிமுறைகள் ஆகியவற்றின்படியே வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிர மாநிலமத்தில் உள்ள மும்பை, தானே, பால்கர் ஆகிய மாவட்டங்களில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழைக்கான மஞ்சள் நிற எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

ராயகாட், ரத்னகிரி ஆகிய கடலோர மாவட்டங்களில் அடுத்த 48 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேசம், அந்தமான் நிகோபார் தீவுகள், கடரோர ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா, ஒடிசா, ராயலசீமா, விதர்பா மற்றும் மேற்கு ராஜஸ்தானில் உள்ள ஒருசில பகுதிகளில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே அசாமில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக 12 மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்களும், 12 ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுள்ள பயிர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாநில பேரிடர் குழு, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

133 நிவாரண மையங்கள் ஏற்படுத்தப்பட்டு 36 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளப்பெருக்கு நிலச்சரிவால் இதுவரை 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழைக்கான வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நீலகிரி, கோவை ஆகிய மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

21 வயதுக்கு உட்பட்டோருக்கான 4 நாடுகள் பங்கேற்கும் மகளிர் ஹாக்கிப் போட்டி பெல்ஜியத்தில் இன்று தொடங்குகிறது.

முதல் போட்டியில் இந்தியா – பெல்ஜியத்தை எதிர்கொள்கிறது. இப்போட்டி பிற்பகல் 3 மணிக்கு தொடங்குகிறது.

-------------

தைவான் ஓபன் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா மேலும் 2 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளது.

இப்போட்டியின் 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

------------

**Santo Domingo** சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சஹஜா எமலாபள்ளி - ஜப்பானின் **Hiroko Kuwata** இணை இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

டொமினிக் குடியரசில் நடைபெற்றும் வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-3 என்ற செட் கணக்கில் கனடாவின் **Annabelle Xu** – சீனாவின் **Yichen Zhao** இணையை வென்றது.

இந்தியா ஏ அணிக்கு எதிரான 2வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்று இங்கிலாந்து லயன்ஸ் அணி தனது முதல் இன்னிங்சின் ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்புக்கு 192 ரன் எடுத்துள்ளது.

நார்த்ஹாம்டனில் நடைபெற்று வரும் இந்தியா ஏ அணி முதல் இன்னிங்சில் 348 ரன் எடுத்துள்ளது.

-------------

நார்வே செஸ் சாம்பியன் போட்டியில் மூன்றாம் இடம் பிடித்த இந்தியாவின் குகேஷுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

-------------

காமன்வெல்த் போட்டிகளை இந்தியாவில் நடத்துவது குறித்து இந்திய ஒலிம்பிக் சங்க தலைவர் திருமதி பி.டி. உஷா தலைமையிலான பிரதிநிதிகள் குழு லண்டனில் உள்ள காமன்வெல்த் அமைப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டது.

வரும் 2030ஆம் ஆண்டில் குஜராத் மாநிலம் அகமதாபாதில் இப்போட்டிகளை நடத்துவது தொடர்பாக இந்த ஆலோசனை நடத்தப்பட்டது.

------------

உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டிகள் இன்று தொடங்குகிறது.

**Munich** நகரில் இன்று தொடங்கும் இப்போட்டிகள் வரும் 15ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

--------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் திருச்சி அணியை வென்றது.

**<<<<The End>>>>**